**செய்தி வெளியீடு எண்: 675** **நாள்: 11.11.12**

<u>செய்தி வெளியீடு</u>

வெள்ளத்தே போகாது வெந்தணலில் வேகாது
கொள்ளத்தான் போதாது கொடுத்தாலும் குறையாது
கள்ளருக்கும் எட்டாது காவலுக்குள் அமையாது
உள்ளத்தே பொருள் இருக்க ஊரில் உழைத்து உழல்வானேன்

என்றார் திருமூலர். அதாவது கற்ற கல்வி வெள்ளத்தால் அடித்துச் செல்லப்படாது. நெருப்பில் எரிந்து சாம்பலாகாது. பிறருக்கு கொடுப்பதால் செல்வத்தைப் போல குறையாது. திருடர்களால் திருடிச் செல்ல முடியாது. அதைக் காவல்காரர்களைப் போட்டு கட்டுப்படுத்தி வைக்க முடியாது. இத்தகைய சிறப்புமிக்க கல்வியை மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் அளிப்பதற்கும், இந்தக் கல்வியை அடிப்படை கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய பாதுகாப்பான சூழ்நிலையில் குழந்தைகள் பயிலுவதற்கும், இவற்றின் மூலம் கல்விப் புரட்சியை ஏற்படுத்திடுவதற்கும் தேவையான பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

பள்ளி மாணவ, மாணவியரின் கல்வி மேம்பாட்டிற்காக, அதிலும் குறிப்பாக, ஏழை, எளிய மக்களின் குழந்தைகள் அனைவரும் இடைநிற்றல் இன்றி பள்ளியில் கல்வி பயிலுவதற்கு ஏதுவாக, விலையில்லா புத்தகங்கள், நோட்டு புத்தகங்கள், சீருடைகள், புத்தகப்பை, கணித உபகரணப் பெட்டி, வண்ணபென்சில், புவியியல் வரைபடங்கள் மற்றும் காலணிகள் வழங்குதல், உதவித் தொகை வழங்குதல், மிதிவண்டி வழங்குதல், மடிக்கணினி வழங்குதல், பள்ளிகளின் கட்டமைப்புகளை மேம்படுத்துதல் போன்ற எண்ணிலடங்கா திட்டங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

பள்ளிகளின் தரம் உயர்த்தப்படுவதாலோ, மாணவ, மாணவியர்களுக்கு கல்வி கற்க பல சலுகைகள் வழங்குவதாலோ மட்டும் தரமான கல்வியை மாணவ, மாணவியர்களுக்கு அளிக்க இயலாது; தேவைக்கு ஏற்ப ஆசிரியர்களும் இருக்கவேண்டும் என்பதனை கருத்தில் கொண்டு தரம் உயர்த்தப்பட்ட மேல்நிலைப் பள்ளிகளுக்காக 1,590 முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை தோற்றுவிக்க சென்ற ஆண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்கள்.

**இந்த ஆண்டும், அரசு/நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் உள்ள மாணவ மாணவியரின் எண்ணிக்கைக்கு தக்கவாறு 1,591 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை தோற்றுவிக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதற்காக அரசுக்கு ஆண்டொன்றுக்கு 63 கோடியே 94 லட்சம் ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும்.**

ஏற்கெனவே இயங்கிவரும், 4,393 பள்ளிகள் மற்றும் புதியதாக தொடங்கப்பட்டுள்ள 544 பள்ளிகள் ஆக மொத்தம் 4,937 பள்ளிகளுக்கு, தலா 1 ஆய்வக உடனாள் (Lab attendar) வீதம் 4,937 ஆய்வக உடனாள் பணியிடங்களை உருவாக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு முடிவெடுத்துள்ளது.

இவற்றில் 544 பள்ளிகளுக்கான 544 ஆய்வக உடனாள் பதவிக்கு மாண்புமிகு தமிழ்க முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே உத்தரவிட்டுள்ளார்கள். **மீதமுள்ள 4,393 பள்ளிகளுக்கு, பள்ளி ஒன்றுக்கு ஒரு ஆய்வக உடனாள் வீதம் 4,393 ஆய்வக உடனாள் பதவிகளை உருவாக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.**

மேலும், 2,108 பள்ளிகளுக்கு பள்ளி ஒன்றுக்கு 1 இளநிலை உதவியாளர் பணியிடம் வீதம் 2,108 இளநிலை உதவியாளர் பணியிடங்களை உருவாக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு முடிவெடுத்துள்ளது. இதில் 344 பள்ளிகளுக்கு பள்ளி ஒன்றுக்கு 1 இளநிலை உதவியாளர் வீதம் 344 இளநிலை உதவியாளர் பதவிகளை தோற்றுவிக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே உத்தரவிட்டுள்ளார்கள். **மீதமுள்ள 1,764 பள்ளிகளுக்கும், பள்ளி ஒன்றுக்கு 1 வீதம் 1,764 இளநிலை உதவியாளர் பதவியினை உருவாக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு 109 கோடியே 3 லட்சம் ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும்.**

**மேலும், பள்ளிகளில் மாணவ, மாணவியர்கள் நல்ல ஆரோக்கியமான சூழ்நிலையில் கல்வி பயிலுவதற்கு ஏற்றவகையில் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள், குடிநீர் வசதி, ஆய்வகம், கழிவறை மற்றும் சுற்றுச் சுவர் முதலான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை 131 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் ஏற்படுத்துவதற்கு 152 கோடியே 73 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.**

பள்ளிக்கல்வித்துறை மூலம் செயல்படுத்தப்படும் இந்த திட்டங்கள் மூலம் மாணவ, மாணவியர்கள் மிகுந்த பயன் அடைவார்கள்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9.
நாள்:- 11.11.2012.